முதலாவது தேர்ச்சி : இறைத்திட்டத்தை விளங்கி அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வர்

2

## 1.2. திருமுழுக்கு யோவானும் அவர் பணிகளும்



நீதி, உண்மை, சமத்துவம் பற்றிப் பலர் பேசக் கேள்விப்பிட்டிருக்கின்றோம். ஆனால் அவற்றை தம் வாழ்வில் கடைப்பிடித்தவர்கள் மிகச் சிலரே. அவ்வாறே தம் வாழ்வில் உண்மை, நீதி, போன்ற பண்புகளை ஏற்று அதற்காகத் தம்மைத் தியாகம் செய்து உயிர்நீத்த ஒருவரைப் பற்றி அறிவோம்.

யோவான் யூதா நாட்டில் வாழ்ந்த செக்கரியாவுக்கும் எலிசபெத்துக்கும் பிறந்தார். இயேசுவின் வழியை ஆயத்தம் செய்தவர் இவரே. உண்மைக்குச் சான்றாகத் தம் உயிரையும் தியாகம் செய்தவர். பல நூற்றாண்டுகளாக இறைவாக்கினர் வழியாக இறைவெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளாத இஸ்ரயேல் மக்களுக்கு திருமுழுக்கு யோவானின் வருகை பெரும் அருட்கொடையாக விளங்கியது. எனவே அவரது போதனையைக் கேட்க பல பகுதிகளிலிருந்தும் எல்லா நிலைகளிலிருந்தும் பலர் வந்திருந்தனர். அவரது போதனைகளைக் கேட்டு மனம்மாறி திருமுழுக்குப் பெற்றனர். செக்கரியாவின் மகனாகிய திருமுழுக்கு யோவான் பாலைநில வாழ்வுக்கு தம்மை அர்ப்பணித்தார். திருமுழுக்கு யோவான் பழைய, புதிய ஏற்பாட்டின் இறைவாக்கினர் ஆவார்.

கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் தொடக்கம்: ''இதோ என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன்; அவர் உமக்கு வழியை ஆயத்தம் செய்வார். பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகின்றது'' ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்; அவருக்காகப் பாதையைச் செம்மை யாக்குங்கள்'' என்று இறைவாக்கினர் எசாயாவின் நூலில் எழுதப்பட்டுள்ளது. இதன்படியே திருமுழுக்கு யோவான் பாலை நிலத்துக்கு வந்து, பாவமன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் என்று பறைசாற்றி வந்தார். யூதேயாவினர் அனைவரும் எருசலேம் நகரினர் யாவரும் அவரிடம் சென்றனர். தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் ஆற்றில் அவரிடம் திருமுழுக்குப் பெற்றுவந்தனர். யோவான் ஒட்டகமுடி ஆடையை அணிந்திருந்தார். தோல்கச்சையை இடையில் கட்டியிருந்தார்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் உண்டு வந்தார். அவர் தொடர்ந்து, '' என்னைவிட வலிமைமிக்க ஒருவர் எனக்குப் பின் வருகிறார். குனிந்து அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை. நான் உங்களுக்குத் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தேன்; அவரோ உங்களுக்குத் தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பார்'' எனப் பறைசாற்றினார்.

மாற்கு 1:1-8

அக்காலத்தில் திருமுழுக்கு யோவான் யூதேயாவின் பாலை நிலத்துக்கு வந்து ''மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது'' என்று பறை சாற்றி வந்தார். அவரைக் குறித்தே, ''பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகின்றது ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்; அவருக்காகப் பாதையைச் செம்மை யாக்குங்கள்'' என்று இறைவாக்கினர் எசாயா உரைத்துள்ளார். இந்த யோவான் ஒட்டக முடியாலான ஆடையை அணிந்திருந்தார். தோல் கச்சையை இடையில் கட்டி இருந்தார்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் உண்டு வந்தார். எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகளனைத்திலும் இருந்தவர்கள் அவரிடம் சென்றார்கள். அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் ஆற்றில் அவரிடம் திருமுழுக்குப் பெற்று வந்தார்கள். பரிசேயர் சதுசேயருள் பலர் தம்மிடம் திருமுழுக்குப் பெறவருவதைக் கண்டு அவர் அவர்களை நோக்கி, ''விரியன் பாம்புக் குட்டிகளே, வரப் போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவர் யார்? நீங்கள் மனம்மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்.

மத்தேயு 3:1-8

மேல் குறிப்பிட்டுள்ள திருவிவிலியப் பகுதியிலிருந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இயேசுவின் வருகையை ஆயத்தம் செய்தவர் யார்?
2. இறைவாக்கினர் எசாயா திருமுழுக்கு யோவானை எவ்வாறு அறிமுகம் செய்கிறார்?
3. திருமுழுக்கு யோவானின் தாழ்ச்சியை வெளிப்படுத்தும் உதாரணம் ஒன்று எழுதுக.
4. திருமுழுக்கு யோவானின் வாழ்க்கையிலிருந்து நீர் கற்றுக் கொள்ளும் படிப்பினைகள் நான்கு எழுதுக.

திருமுழுக்கு யோவான் தனது போதனையில் மூன்று பகுதியினருக்கும் கொடுத்த அறிவுரைகளைத் தேடிப் பார்ப்போம்.

ஏற்கெனவே மரங்களின் வேர் அருகே கோடரி வைத்தாயிற்று. நற்கனி தரா மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுத் தீயில் போடப்படும் என்றார். அப்போது, ‘‘நாங்கள் என்ன செய்ய வேண்டும்’’ என்று கூட்டத்தினர் அவரிடம் கேட்டனர். அதற்கு அவர் மறுமொழியாக, ‘‘இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்; உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்’’ என்றார். வரி தண்டுவோரும் திருமுழுக்குப் பெற வந்து, ‘‘போதகரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்’’ என்று அவரிடம் கேட்டனர். அவர், ‘‘ உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்’’. என்றார். படைவீரரும் அவரை நோக்கி, ‘‘நாங்கள் என்ன செய்ய வேண்டும்’’ என்று கேட்டனர். அவர், ‘‘நீங்கள் எவரையும் அச்சுறுத்தி பணம் பறிக்காதீர்கள்! யார் மீதும் பொய்க் குற்றம் சுமத்தாதீர்கள்; உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்’’ என்றார்.

லூக். 3:9-14

மேலேயுள்ள திருவிவிலியப் பகுதியின் திருமுழுக்கு யோவான் வழங்கிய அறிவுரைகளையும் அவற்றைப் பெற்றுக்கொண்ட மக்களையும், நாம் பெறும் படிப்பினைகளையும் அட்டவணைப்படுத்துக.

| | அறிவுரை | எனது மனநிலை |
|---|---|---|
| 1. மக்கள் கூட்டம் | | |
| 2. வரி தண்டுவோர் | | |
| 3. படைவீரர் | | |

திருமுழுக்கு யோவான் பழைய புதிய, ஏற்பாட்டின் இறைவாக்கினர் ஆவார்

**திருமுழுக்கு யோவான் கிறிஸ்துவை அறிமுகம் செய்கிறார்**

எருசலேமில் உள்ள யூதர்கள் குருக்களையும் லேவியர்களையும் திருமுழுக்கு யோவானிடம் அனுப்பினார்கள்.

குருக்கள், லேவியர் - நீர் யார்?

திருமுழுக்கு யோவான் - நான் மெசியா அல்ல.

குருக்கள், லேவியர் - அப்படியானால் நீர் யார்? நீர் எலியாவா?

திருமுழுக்கு யோவான் - நானல்ல

குருக்கள், லேவியர் - நீர் தாம் வரவேண்டிய இறைவாக்கினரா?

திருமுழுக்கு யோவான் - இல்லை.

குருக்கள், லேவியர் - நீர் யார்? எங்களை அனுப்பியவர்களிடம் நாம் மறுமொழி சொல்லியாக வேண்டும். எனவே உம்மைப்பற்றி என்ன சொல்லுகிறீர்?

திருமுழுக்கு யோவான் - ஆண்டவருக்காக வழியைச் செம்மையாக்குங்கள் எனப் பாலைநிலத்தில் குரல் ஒன்று கேட்கிறது என்று இறைவாக்கினர் எசாயா உரைத்தது என்னைப்பற்றியே.

குருக்கள், லேவியர் - நீர் மெசியாவோ எலியாவோ வரவேண்டிய அல்லவெ இறைவாக்கினரோ என்றால் ஏன் திருமுழுக்குக் கொடுக்கிறீர்?

திருமுழுக்கு யோவான் - நான் தண்ணீரால் திருமுழுக்கு கொடுக்கிறேன். நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார். அவர் எனக்குப் பின் வருபவர். அவரது மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை.

யோவான் 1:19-27

மறுநாள் இயேசு தம்மிடம் வருவதைக் கண்டயோவான் ''இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி; ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர். எனக்குப் பின்வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர்; ஏனெனில் எனக்கு முன்பே இருந்தார் என்று நான் இவரைப் பற்றியே சொன்னேன். இவர் யாரென்று எனக்கும் தெரியாதிருந்தது. ஆனால் இஸ்ரயேல் மக்களுக்கு இவரை வெளிப்படுத்தும் பொருட்டே நான் வந்துள்ளேன்; தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தும் வருகிறேன்'' என்றார்.

யோவான் 1:29-31

திருமுழுக்கு யோவான் தாழ்ச்சியும் உண்மையும் நிறைந்த சமூகத் தலைவராக உள்ளார் என மேலுள்ள திருவிவிலியப் பகுதிகளிலிருந்து அறிகிறோம். இறக்க நேர்ந்தாலும் நாம் உண்மைக்குச் சான்று பகரவேண்டுமென்பதை அறிகின்றோம்.

## செயற்பாடு

- இன்று சமூகத்தில் உண்மைக்குச் சான்று பகரக் கூடிய சந்தர்ப்பங்கள் ஐந்து எழுதுக.
- இன்று சமூகத்தில் பல நிலைகளிலும் வாழும் மக்களுக்கு திருமுழுக்கு யோவான் கூறும் அறிவுரைகள் இரண்டு எழுதுக.

| பல்வேறு நிலைகள் | திருமுழுக்கு யோவானின் அறிவுரைகள் |
|---|---|
| 1. ஆசிரியர் | |
| 2. அம்மா | |
| 3. அப்பா | |
| 4. தரம் 8 மாணவர் | |
| 5. அரச ஊழியர் | |
| 6. குருக்கள் | |
| 7. துறவியர் | |

### வாழ்க்கைக்கு

உண்மையை அறிவோம்
உண்மையில் வாழ்வோம்
உண்மையில் வாழவைப்போம்